# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1410/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பரமசிவம் | த-பெ | வெள்ளைசாமி |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 35/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆட்டோ ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.04.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து ஓட்டோ ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். 01.02.2020 அன்று காலை 8.00 மணிக்கு எனது தகப்பனார் வெள்ளைச்சாமி வீட்டில்இருந்து கிளம்பி பெருமாள் மேஸ்திரி என்பவர் வீட்டிற்கு வேலைக்கு சென்று விட்டார். அன்றைய தினம் மாலை 5.00 மணியளவில் வீட்டிற்கு வந்து விட்டார். மீண்டும் 6.00 மணிக்கு பெருமாள் மேஸ்திரி வீட்டிற்கு வேலைக்கு சைக்கிளில் சென்றுவிட்டார். பின்னர் மறு நாள் காலை சரவணன் மற்றும் பெருமாள் மேஸ்திரியின் மகள் ஆகியோர் எனது அண்ணனுக்கு செல் போனில் தொடர்பு கொண்டு எனது தகப்பனாருக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வடிந்து கொண்டிருப்பதாக சொன்னார். சம்பவயிடத்திற்கு வர சொல்லி வீட்டிற்கு அழைத்து செல்லுமாறு எங்களிடம் சொன்னார்கள். நான் அன்றைய தினம் 8.00 மணிக்கு அரண்மனை கன்மாய் சென்று பார்த்த போது எனது தகப்பனாருக்கு காதிலும், மூகிலும் ரத்தம் வடிந்து, மார்பு பகுதியில் டிராக்டர் ஏறி இறங்கியிருந்த அச்சு இருந்தது. பின்னர் நான் குன்றக்குடி காவல் நிலையத்திற்கு மதியம் 12.00 மணிக்கு சென்று நடந்த விவரங்களை சொல்லி புகார் கொடுத்தேன். **புகார் அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. பின்னர் மேற்படி டிராக்டரை சரவணன் என்பவர் ஓட்டி சென்று எனது தகப்பனார் மீது விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று நான் தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் எனது தகப்பானரின் நெஞ்சு பகுதியில் டிராக்டர் ஏறி இறங்கியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. புகார் யார் எழுதியது என்றால் சரவணன் என்ற போலீசார் தான் எழுதினார். நான் புகாரில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான்.

புகாரில் எனது தகப்பனாரை நான் பார்த்த போது எங்கெங்கு காயங்கள் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் நான் சொன்னேன் போலீசார் எழுதவில்லை. அ.சா.1 புகாரில் நான் சொல்லிய விவரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக வயலில் கதிர் அறுக்கும் போது குறைந்தது 10 நபர்கள் வேலை பார்ப்பாகள் என்றால் இல்லை 2 நபர்கள் தான் வேலை பார்த்தார்கள். மேற்படி வயலில் 2 பேர் தான் வேலை பார்த்தார்கள் என்ற விவரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று மேற்படி வயலில் யார் யார் வேலை பார்த்தார்கள் என்று பெருமாள் மேஸ்திரி மற்றும் அவரது மகள் முத்து மீனால் அவர்களிடமோ கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு தகவல் சொன்ன முத்து மீனாள் டிராக்டர் ஏறி தான் எனது தகப்பனார் இறந்ததாக தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு மது பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் பெருமாள் மேஸ்திரி வந்தார் என்றால் இல்லை. முத்து மீனாள் எனது தகப்பனாரை வீட்டிற்கு தூக்கி செல்லுங்கள் போலீஸ் கேஸ் ஆயிவிடும் என்று வர்ப்புருத்தினார் என்றால் சரிதான். எதிரி வீடு, என் சகோதரர் வீடு, எனது தகப்பனார் வீடு அனைத்தும் பக்கத்து வீடு என்றால் சரிதான். எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன் விரோதம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் குடி போதையில் எங்கோ விழுந்து ஏற்பட்ட காயத்தால் இறந்து விட்டார், எனது தகப்பனார் இறந்ததற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரியின் கவனக்குறைவால் இந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை எதிரி இயக்கிய வாகனத்தால் இந்த வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் இறந்த வழக்கு சம்பவத்தை பொருத்து இழப்பீடு தொகை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 12:14:47 +0530

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.